
# ஃபிஜியிலிருந்து களமுனைக்கு



ஜோர்டன்

பெப்ருவரி 28

வாரம் 9

ஃபிஜி



- என் உள்ளத்திற்குள் உருவான ஒரு தீவிர வாஞ்சைதான் என் ஊழியத்திற்கான ஆரம்பப்புள்ளியாக இருந்தது. 2023இல், ஒரு இணைய ஒலிபரப்பில் என்னுடைய சாட்சியைப் பகிர்ந்து கொண்டபின், மிகப்பெரிய திட்டம் ஒன்றை தேவன் எனக்காக வைத்திருந்ததைப் புரிந்து கொண்டேன். ஒரு சில மாதங்கள் கழித்து, இறையியல் படிப்பை முடித்தேன், தேவன் என்னை எந்த இடத்திற்கு அனுப்பினாலும் அங்கு அவருக்காக ஊழியம் செய்யவேண்டும் என்கிற ஆவல் எனக்குள்ளாக உண்டானது.
- டோங்கோ மிஷனில் வளாக போதகர் பணி காலியாயாக இருந்ததால், முதன்முதலாக அங்கு விண்ணப்பித்தேன். இரண்டு வாரங்கள் கழித்து, என் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பதில் கிடைத்தது. சந்தோஷப்பட்டேன், நம்பிக்கையுடன் ஜெபித்தேன், அதுவே என் முதல் அதிகாரப்பூர்வ ஊழியப்பணியாக இருக்கப்போகிறதென நம்பினேன். கதவு எவ்வளவு வேகமாகத் திறந்ததோ, அவ்வளவு வேகமாக மூடியது. இரண்டாவது எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் நிமித்தம் அந்தப் பணி கிடைக்கவில்லை.



- வேறு அட்வென்டிஸ்ட் அமைப்புகளிலும் ஊழியப்பணிகளுக்காக விண்ணப்பித்தேன், ஒன்றும் நடக்கவில்லை. ஊக்கம் இழந்தேன், எல்லாருமே என்னை மறந்துவிட்டது போன்ற உணர்வு உண்டானது. பிறகு, ஒருவர் சொன்ன அறிவுரைதான் எல்லாவற்றையும் மாற்றியது.
- என் முன்னாள் ஆசிரியர்களில் ஒருவரான டாக்டர். டபுவா டுய்மா என்பவர், என் கண்களைப் பார்த்து, "உலகத்திற்குள் செல்வதற்குமுன் முதலில் ஃபிஜியில் உன் ஊழியத்தைத் துவங்கு" என்றார். அந்த வார்த்தைகள் என் மனதில் பதிந்தன.
- பிறகு, ஃபிஜி மிஷனுடைய ஊழிய இலாக செயலரைச் சந்தித்தேன். மிஷன் அலுவலகத்திற்கு அதிகாரப்பூர்வமாக ஒரு விண்ணப்பத்தை அனுப்புமாறு என்னிடம் கூறினார். தாழ்மையான மனதுடன், ஒரு எளிய சுயவிபரத்துடன், ஃபிஜி மொழி பேசும் மக்கள் மத்தியில், தகவல் தொடர்பு துறையில் ஊழியம் செய்ய விரும்புவதாக விண்ணப்பித்தேன். 2024, மார்ச் மாதத்தின் பின்பகுதியில், நான் எதிர்பார்க்காத ஒரு கதவை தேவன் திறந்தார்.



- அந்நகரத்தில் மூன்று சபைகளைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்டேன். எனக்கு எந்தப் பட்டமும் சம்பளமும் கொடுக்கப்படவில்லை; அது ஒரு அழைப்பாக இருந்தது, உற்சாக மனதுடன் அந்த ஊழியத்தில் ஈடுபட்டேன்.
- முதல் நாளிலிருந்தே கடும் சவால்கள் எழுந்தன. மொழிப்பிரச்சினை மிகப்பெரிய சவாலாக இருந்தது. ஃபிஜி மொழியில் சரளமாகப் பிரசங்கம்பண்ணவும், ஜெபிக்கவும், ஊழியம் செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு நாள் மூப்பரின் மனைவி மெதுவாக, “புதிய போதகர் ஆங்கிலத்தில் பிரசங்கம்பண்ணுவதால் விசுவாசிகள் சிலருக்கு அவரைப் பிடிக்கவில்லை” என்று சொன்னார்கள். மிகவும் வயது குறைந்த ஒருவரை அலுவலகம் ஏன் அனுப்பிவைத்தது என்று கேள்வி எழுப்பினார்கள். எனக்கு அப்போது 22 வயதுதான்.
- அந்த வார்த்தைகள் என்னைப் புண்படுத்தின; ஆனால் அவை என்னை அதைரியப்படுத்த நான் அனுமதிக்கவில்லை. அங்கேயே இருந்தேன், ஜெபித்தேன், முயற்சியை விடவில்லை.




- ஓய்வுநாள் மராத்தான் வேகத்தில்தான் செல்லும். ஒரு சபையில் ஓய்வுநாள் பள்ளி, அடுத்த சபையில் தெய்வீக ஆராதனை, மூன்றாவது சபையில் அட்வென்டிஸ்ட் வாலிபர் நிகழ்ச்சிகள் என்று ஓடிக்கொண்டிருப்பேன். அந்த பரபரப்பின் மத்தியிலும் அருமையான ஒன்று நிகழ்ந்தது, அதாவது என் சபை மக்களைப் புரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தேன். அவர்களுடைய மொழி எனக்குப் பழக்கமானது. என்னை அவர்கள் நம்ப ஆரம்பித்தது பிரதிபலனாகக் கிடைத்தது.
- பிறகு, மே மாதத்தில் ஒரு புதிய அத்தியாயம் துவங்கியது. ஹோப் எஃப்எம் ஃபிஜி சேனலில், கோஸ்ட் டு கோஸ்ட் பிரேக்பர்ஸ்ட் ஷோ என்கிற நிகழ்ச்சியை நடத்துவதற்கு எனக்கு அழைப்பு வந்தது. முதலில், என்னால் சரியாகப் பேசமுடியவில்லை, வார்த்தைகள் குளறின; சாதனங்களை சரியாகப் பயன்படுத்த முடியவில்லை, இரவு வெகு நேரம் வரையிலும் ஊழியம் செய்வதால் களைப்பாகவும் இருந்தது. குறுஞ்செய்திகள் மற்றும் மின்னஞ்சல்கள்மூலமாக எதிர்மறையான விமர்சனங்கள் வந்தன.



- ஆனாலும் அந்த நிகழ்ச்சியிலிருந்து வெளியேறவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ஃபிஜியில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் என் குரல் மக்களுக்குப் பிடித்துப்போனது.
- இணையதளம்மூலம் என் சாட்சிகளைப் பகிர்ந்தேன்; திருச்சபை நியதிகளை விளக்கினேன்; வேதவசன ஆராய்ச்சி நடத்தினேன்; நேயர்களை ஊக்குவித்தேன். ஆனாலும் என் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏராளமான பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருந்தேன்.
- எனக்கு வருமானம் இல்லை, ஆனாலும் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்கிற பாரம் என்னிடம் காணப்பட்டது. 16 வயதான என் சகோதரியின் படிப்புக்கு உதவினேன், அதேபோல கஷ்டத்தின் நிமித்தம் படிப்பை நிறுத்தியிருந்த என் உறவினர் ஒருவரது படிப்புக்கு உதவினேன். மூன்று வருடங்களுக்கான படிப்புக்கட்டணத்தை நானே செலுத்துவதாக வாக்குப் பண்ணியிருந்தேன், அதற்கான தேவைகளை தேவன் சந்திப்பாரென நம்பினேன்.





- அது கடினமாகத்தான் இருந்தது, ஆனால் நான் ஒருநாளும் பட்டினி கிடக்கவில்லை. சில சமயங்களில் என் சபையின் **தலைமை மூப்பர்** என்னை தன் காரில் ஏற்றிச்செல்வார், அவ்வப்போது சிறுசிறு பரிசுகள் கொடுப்பார். அவரது அந்தச் சிறு உதவிகளை என்னால் மறக்கவே முடியாது.
- வாரத்தில் திங்கட்கிழமை மட்டும் எனக்கு விடுமுறை; ஆனால் அன்றும்கூட முதியவர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்காக ஜெபிப்பேன்; தேவன் எனக்கு தாழ்மையைக் கற்றுக்கொடுக்க வேண்டிக்கொள்வேன். அந்த முதியவர்களின் ஞானமான வார்த்தைகள்மூலம் தேவன் எனக்கு தேவையான ஆலோசனையைக் கொடுத்தார்.
- பிறகு சைகை மொழி வகுப்பில் சேர்ந்தேன், வாரத்திற்கு இரண்டு நாட்கள் என ஆறுமாதங்களில் அதில் கலந்துகொண்டேன். 2024இல் அதில் தேர்ச்சியடைந்தேன், அந்த மாதத்தில்தான் நான் படிப்புக்கு உதவின அந்த இரு சிறுமிகளுக்கும் பள்ளிக்கட்டணத்தையும் செலுத்தினேன். அது உண்மையிலேயே அற்புதம்தான்.



- இன்று, இந்தோனேசியாவில் உள்ள கிழக்கு ஜாவாவில் இருக்கிறேன். அது என் சொந்த ஊரிலிருந்து வெகுதொலைவில் இருந்தாலும் கூட அங்கு நான் இருக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய திட்டம். அங்கு ஒரு பள்ளியில் ஆங்கிலப் பாடம் நடத்துகிறேன். அந்த நாட்டில் கிறிஸ்தவ மதம்பற்றி பொது வெளியில் பேசமுடியாது; அந்நிலையில் அங்குள்ள மாணவர்களை கிறிஸ்துவை நோக்கி வழிநடத்துவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.
- எனக்கு போராட்டம் இருக்கிறது. அங்கு பணி செய்வதற்கு ஆலயம் எதுவுமில்லை. ஆனால், இதுதான் உன் ஊழியக்களம் என்று தினமும் தேவன் எனக்கு ஞாபகப்படுத்தி வருகிறார். தேவனே என்னுடைய நித்திய துணை, என்னுடைய சிறந்த நண்பர் என்கிற உண்மையை பற்றிப்பிடித்து வருகிறேன். எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.